[1981 ஜனவரி 24

செயற்கை மழை தருவித்தல்.

!வினா எண். 31—திரு. மி. வின்சென்ட் :—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செயற்கை மழையை வரவழைக்க எந்த ஆண்டு மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டது ?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன் யாது ?

(இ) இதனால் அரசுக்கு லாபமா ? நஷ்டமா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) 1975 ஆம் ஆண்டு இந்தச் செயற்கை மழை தருவிக்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

(ஆ) மற்றும் (இ) 1975 ஆம் ஆண்டு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நிலவிய கடுமையான வறட்சி நிலை காரணமாக மக்கள் குடிதண்ணீர் மற்றும் வேளாண்மைத் தேவைகளுக்கு மிகுந்த துன்பப்பட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு இலாப நஷ்ட நோக்கின்றி இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்ததா ? அது பேய் மழையா ? பொய் மழையா ? மெய் மழை என்றால் எங்கே பெய்தது ? அரசு எவ்வளவு ரூபாய் செலவழித்தது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இலாப நஷ்ட நோக்கமின்றி இது செயல்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஏற்பட்ட செலவு நிகரமாக ரூபாய் 65,87,002.67 காசுகள்.

திரு. இரா. தாமரைக்கனி : செயற்கை முறை மழை மாவட்ட வாரியாகவா ? இந்தியா முழுவதுமா ? அல்லது தமிழ் நாட்டில் மட்டுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 6 லட்சம் ரூபாய் செயற்கை மழை பெய்விக்க செலவழித்ததாகச் சொன்னார்கள். அதனால், தமிழ் நாட்டு விவசாயிகளுக்குக் கிடைத்த ஆதாயம் என்ன ? விளைபொருள் அதிகமாயிற்றா? புள்ளி விவரங்களைக் கூறுவார்களா ?

1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1975-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது செயல்படுத்தப் பட்டது. சென்னை மற்றும் சுற்றுப்புறங்களுக்குச் செயல்படுத் தப்பட்டது. சென்னை நகரத்தின் குடிநீர்த் தேவை, சுற்றுப் புறங்களில் உள்ள விவசாயிகள் தேவையை முன்னிட்டு செயல் படுத்தப்பட்டது. அமெரிக்கக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற நிலைமைகள் ஏற் படுவதைப் போக்குவதற்காக செயற்கை மழை பெய்ய வைக்கப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மதுரை இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே குடிநீருக்கே மிகச் சிரம மான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது செயற்கை மழை பெய்ய வைப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது இயற்கை மழையை எதிர்ப்பார்ப்போமாக.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவர் அவர்களே, 1975-ஆம் ஆண்டிலே வரவழைக்கப்பட்ட செயற்கை மழை எத் தனை மில்லி மீட்டர் பெய்தது? எந்த எந்தப் பகுதிகளிலே பெய்தது என்ற விவரங்களைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவரம் இல்லை.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இப்போது மழை பெய்விப்பதற்குப் பணத்தைச் செலவு செய்கிற நிலைமை இருக் கிறது. சில இராகங்களைப் பாடியே மழை பெய்ய வைத்திருப்ப தாகச் சொல்லுகிறார்கள். தீபக் என்ற இராகத்தைப் பாடி புதுக்கோட்டை அரண்மனையையே தீப்பிடிக்க வைத்ததாக எல் லாம் சங்கீத வரலாறு சொல்கிறது. சில இராகங்களைப் பாடி பயிர் விளைவித்து இருக்கிறார்கள், சில இராகங்களைப் பாடியே வருண பகவான் மழை பொழிய கூடிய நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வித்தகர்களை வைத்து சில இராகங்களைப் பாடச் செய்து மழையைப் பொழியச் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: திரு. துரைமுருகன் அவர்களுடைய வயலில் இதை செயல்படுத்திப் பார்த்து தம் முடைய முடிவைச் சொல்வார்களானால் அதைப் பற்றி ஆராய லாம்.